# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.214/மா/2025
நாள் 07.07.2025

| | |
|---|---|
| திரு K. முருகேசன்<br>மதுரை | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>மதுரை மாநகராட்சி | எதிர் மனுதாரர் |

மதுரை, மூன்று மாவடி, கற்பக நகர், கதவு எண் 839 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.K.முருகேசன் என்பவரின் 02.05.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 06.05.2025 அன்று பெறப்பட்டு 214/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, மூன்று மாவடி, கற்பக நகர், கதவு எண் 839 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.K.முருகேசன் தனது 02.05.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் மேற்படி விலாசத்தில் வசித்து, மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் பிளாக் எண் 7ல் உருளைகிழங்கு கடை எண் 13ஐ 2017ம் ஆண்டு முதல் வாடகை ஒப்பந்தப் பத்திரத்தின் அடிப்படையில் உள் வாடகைக்கு காய்கறி வியாபாரம் செய்து வந்தேன். இதனால் முதலீடாக பல இலட்சங்கள் கடன் வாங்கி முதலீடு செய்துள்ளேன். மின் கட்டணம் தவறாமல் செலுத்தியுள்ளேன். ஆனால் கடையின் உரிமதாரர் A.சேர்மமணி என்பவர் என்னிடம் தினசரி வாடகை வசூல் செய்து விட்டு மாநகராட்சிக்கு 2017 ஆம் ஆண்டு முதல் இன்று வரை வாடகை வரி விதிப்பு செலுத்தவில்லை. மாநகராட்சியின் அழுத்தம் காரணமாக நானே பாக்கியில்லாமல் வாடகையை செலுத்தி உள்ளேன். இந்நிலையில் 20.05.2023 அன்று கடையின் உரிமதாரர் A.சேர்மமணி என்பவர் கடையை ஒரு வாரத்தில் காலி செய்யுமாறு வற்புறுத்தினார். நான் கால அவகாசம் கோரினேன். இதனால் A.சேர்மமணி என்பவர் மாட்டுத்தாவணி காவல் நிலையத்தில் கடையை காலி செய்ய வேண்டி புகார் அளித்தார். இதனால் நான் கால அவகாசம் கோரி, மதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.295/2023 சிவில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது. இந்நிலையில் 10.09.2024 அன்று மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் கடையை காலி செய்ய வேண்டி கடிதம் வழங்கப்பட்டது. அதற்கு 13.09.2024 அன்று நேரடியாக சென்று முழு விளக்கத்துடன் மனு அளித்தேன். இந்நிலையில் எனக்கும், எதிர் மனுதாரர் A.சேர்மமணி என்பவருக்கும் சிவில் வழக்கு உள்ள நிலையில் மதுரை மாநகராட்சி வருவாய் உதவி ஆணையாளர் அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு கடையினை பூட்டி சீல் வைக்காமல் எதிர்மனுதாரர் வசம் கடையை ஒப்படைத்துள்ளார். இதனால் எனக்கு வருவாய் இழப்பு, பெருத்த நஷ்டம், மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது.

25.01.2025 அன்றைய மாநகராட்சி வருவாய் உதவி ஆணையாளர் அவர்களின் கடிதத்தை எதிர்த்து மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு W.P.(MD) No.3144/2025 தாக்கல் செய்துள்ளேன். 21.05.2025 அன்று எதிர்மனுதாரருக்கு வழங்கிய கடிதத்தில் விதிகள் பின்பற்றப்படவில்லை. ஏனெனில் கடையை உள்வாடகைக்கு விடப்பட்டது தெரிய வந்தால் அரசாணை எண் 67 நாள் 02.03.1999–ன்படி கடையின் உரிமம் ரத்து செய்யப்பட்டு, பொது ஏலத்தில் விடப்படும் என்பது விதி. அதுபோக 25.01.2025 அன்றைய கடிதத்தில் மாத வாடகை நிலுவை உள்ளதால் கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டது என தவறாக கூறியுள்ளார். ஏனெனில் 30.08.2024 அன்று நடப்பு ஆண்டு வரை நான் வாடகை செலுத்தியுள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கடையினை சீல் வைக்கவில்லை.

ஆகவே, சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்ட மதுரை மாநகராட்சி வருவாய் உதவி ஆணையாளர் அவர்களின் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சட்டப் பிரிவு 2(1)(a)(i)–ன்படி நடவடிக்கை வேண்டி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவராகிய தாங்களிடம் இந்த குற்றச்சாட்டினை எழுத்து பூர்வமாக பதிவு அஞ்சல் மூலம் மனுவாக தாக்கல் செய்கிறேன். எனக்கு உரிய நீதி வழங்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் மேற்கண்ட மனு இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

> மனுதாரர், மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் பிளாக் எண் 7ல் உருளைகிழங்கு கடை எண் 13ஐ 2017ம் ஆண்டு முதல் வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உள் வாடகைக்கு காய்கறி வியாபாரம் செய்து வருவதாகவும், ஆனால் கடையின் உரிமதாரர் A.சேர்மமணி என்பவர் தன்னிடம் தினசரி வாடகை வசூல் செய்திருந்தாலும், மாநகராட்சிகுரிய வாடகையை தானே பாக்கியில்லாமல் செலுத்தி உள்ளதாகவும், இந்நிலையில் 20.05.2023 அன்று கடையின் உரிமதாரர் A.சேர்மமணி என்பவர் கடையை ஒரு வாரத்தில் காலி செய்யுமாறு வற்புறுத்தியதாகவும், தான் காலஅவகாசம் கேட்டும், மேற்கண்ட கடையின் உரிமதாரர் A.சேர்மமணி என்பவர் மாட்டுத்தாவணி காவல் நிலையத்தில் கடையை காலி செய்ய வேண்டி புகார் அளித்ததாகவும், இதனால் கால அவகாசம் கோரி, மதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.295/2023 சிவில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் 10.09.2024 அன்று மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் கடையை காலி செய்ய வேண்டி கடிதம் வழங்கப்பட்டதற்கு, நேரடியாக சென்று முழு விளக்கம் அளித்ததாகவும், மேற்கண்ட சிவில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மதுரை மாநகராட்சி வருவாய் உதவி ஆணையாளர் கடையினை பூட்டி சீல் வைக்காமல் மேற்கண்ட கடையின் உரிமதாரர் திரு.A.சேர்மமணி அவர்கள் வசம் கடையை ஒப்படைத்துள்ளதாகவும், இதனால் தனக்கு வருவாய் இழப்பு, பெருத்த நஷ்டம், மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டதாகவும், 25.01.2025 அன்றைய மாநகராட்சி வருவாய் உதவி ஆணையாளரின் கடிதத்தை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு W.P.(MD)No.3144/2025 தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரருக்கு வழங்கிய கடிதத்தில் விதிகள் பின்பற்றப்படவில்லை என்றும், ஏனெனில் கடையை உள்வாடகைக்கு விடப்பட்டது தெரிய வந்தால் அரசாணை எண் 67, நாள் 02.03.1999–ன்படி கடையின் உரிமம் ரத்து செய்யப்பட்டு, பொது ஏலத்தில் விடப்படும் என்பது விதியாகும் எனவும், அதுபோக 25.01.2025 அன்றைய கடிதத்தில் மாத வாடகை நிலுவையில் உள்ளதால் கடை பூட்டி சீல் வைக்கப்பட்டது என தவறாக கூறியுள்ளதாகவும், 30.08.2024 அன்று நடப்பு ஆண்டு வரை வாடகை செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்து, மதுரை மாநகராட்சி வருவாய் உதவி ஆணையாளரின் மீது தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவம் சட்டம் பிரிவு 2(1)(a)(i)–ன்படி நடவடிக்கை எடுக்கக் கோரியிருப்பது அறிய முடிகிறது.

3. இந்நிலையில் மனுதாரரின் புகார் தொடர்பாக மேலே குறிப்பிடப்படப்பட்ட இரண்டு வழக்குகளும் தற்போது வரை நிலுவையில் உள்ளது என்று அறிய முடிகிறது.

4. மேற்காண் சூழ்நிலையில், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என வரையறுக்கப்பட்டுள்ளது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, Section 10(3). The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act,1952 or any matter pending before a Court;
(c) xxx xxx

எனவே, மனுதாரரின் புகார் தொடர்பாக நீதி மன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க இயலாது என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள்7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. K. முருகேசன்,
கதவு எண் 839, கற்பக நகர்,
மூன்று மாவடி, மதுரை–625 007.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, தல்லாகுளம், மதுரை–625 002.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032